## 2.9 2002–03 ஆம் ஆண்டிற்கான திட்ட செயல்பாட்டிற்கான தொகுக்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.75 நாள் : 19.06.2002

படிக்க :

1) அரசு ஆணை(நிலை) எண்.99, ஊரக வளர்ச்சி(மதி1) துறை நாள்.21.05.1998
2) அரசு ஆணை(நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி(மதி1) துறை நாள்.15.04.1999
3) அரசு ஆணை(நிலை) எண்.123, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள்.07.07.1999
4) அரசு ஆணை (நிலை) எண்.155, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள்.27.07.1999
5) அரசு ஆணை (நிலை) எண்.138, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள்.25.05.2000
6) அரசு ஆணை (நிலை) எண்.151, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள்.19.06.2000
7) அரசு ஆணை (நிலை) எண்.286, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள்.30.10.2000
8) அரசு ஆணை (நிலை) எண்.221, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள்.05.09.2001
9) அரசு ஆணை (நிலை) எண்.26, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள்.09.04.2002

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகள் இதன் மூலம் நீக்கப்பட்டு கீழ்வரும் ஆணைகள் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்துக்கு வழிகாட்டி நெறிமுறைகளாக தொகுத்து வெளியிடப்படுகின்றன.

2. நிதியைப் பெறுவதற்கான அதிகாரம் : சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைப் பெறுவதற்கு ஊரக வளர்சசி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

3. நிதியைப் பகிர்ந்தளிப்பதற்கான அதிகாரம் : இந்த நிதியை, இத்திட்டக் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட்ட பிறகு தேவைக்கேற்ப சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விடுவிப்பதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் மற்றும் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்படுகிறது.

4. இத்திட்டத்திற்கு அரசு விடுவிக்கும் தொகை கீழ்கண்ட விதிமுறைகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் (சென்னை நீங்கலாக) சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் பணிகளை செய்து முடிக்க வழங்கப்படுகிறது.

(i) ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்.

ஒரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி, ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் இருக்குமானால், அந்தந்த மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு எந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர் பணியினை தேர்வு செய்கின்றாரோ அந்த அளவிற்கான தொகையினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரித்து வழங்க வேண்டும்.

(ii) திட்ட செயல்பாடு.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையரால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற பணிகள், ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகள், நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகத் துறை, பேரூராட்சித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சாரவாரியம் போன்ற துறைகள் மூலம் செயல்படுத்தப்படும்.

(iii) ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல்.

தமிழ்நாடு திறந்த ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998, தமிழ்நாடு திறந்த ஒப்பந்தப் புள்ளிகள் விதிகள் 2000 மற்றும் அரசால் அவ்வப்போது வெளியிடப்பட்டு நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோருதல், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு பின்பற்றப்பட வேண்டும்.

## 2. MLACDS

(iv) காலஅட்டவணை

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகளை நிறைவேற்றுவதற்கு கீழ்கண்ட கால அட்டவணை பின்பற்றப்படவேண்டும்.

| வ. எண் | நடவடிக்கைகள் | குறிப்பிட்ட தேதியிலோ அல்லது அதற்கு முன்போ |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களால் இறுதியான பணிகளின் பட்டியல் சென்னை மாநகராட்சி ஆணையருக்கோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கோ அளிக்கப்பட வேண்டிய நாள் | 31.07.2002 |
| 2. | அனைத்துப் பணிகளுக்கும் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பு அளிக்கப்பட வேண்டிய நாள். | 31.08.2002 |
| 3. | அனைத்துப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட வேண்டிய நாள். | 30.09.2002 |
| 4. | அனைத்துப் பணிகளும் துவக்கப்பட்டு பணி முன்னேற்றம் | 15.10.2002. |
| 5. | அனைத்துப் பணிகளும் முழுமையாக முடிக்கப்பட வேண்டிய நாள். | 28.02.2003. |
| 6. | பயன்பாட்டுச் சான்றிதழ் அனுப்புதல் | 31.03.2003. |

(v) திட்டப் பணிகளை ஆய்வு செய்தலும், மேற்பார்வையிடுதலும்.

ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே கண்காணிக்கும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் திட்டத்தை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் கண்காணிப்பார். இத்திட்ட செயல்பாடு குறித்த மாதாந்திர அறிக்கையை மாவட்ட ஆட்சியர் அடுத்து வரும் மாதங்களில் 5–ம் நாளுக்குள் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பி வைப்பார். மேலும், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களும், ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த அலுவலர்களும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு மாதாந்திர அறிக்கையை அடுத்து வரும் மாதங்களில் 5–ம் நாளுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையைச் சேர்ந்த அரசு அலுவலர்களும், ஊரக வளர்ச்சி இயக்குநரும் ஊரக வளர்ச்சித்துறை அரசுச் செயலரும் இத்திட்டச் செயல்பாட்டை பார்வையிட்டு அவ்வப்போது ஆய்வு செய்வார்கள்.

(vi) மேற்பார்வையிடுதல் மற்றும் துறைக்கான செலவு (சென்டேஜ் செலவு)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் கட்டிட மையம் போன்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் பணிகளுக்கு மேற்பார்வையிடுதல் செலவு மற்றும் கட்டணச் செலவு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணி மதிப்பீட்டினுள் அடங்கும். அரசுத் துறைகளான பொதுப்பணித்துறை. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, பேரூராட்சித் துறை போன்றவைகளுக்கு மேற்பார்வையிடுதல் செலவு மற்றும் கட்டணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

(vii) மாவட்ட அளவிலான தொழில்நுட்ப அலுவலர்களுக்கு அதிகாரம்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகளை செயல்படுத்துவதற்காக மாவட்ட அளவிலான தொழில்நுட்ப அலுவலர்களுக்கு இப்பணிகளுக்காக தொழில்நுட்ப ஒப்பளிப்பு அளிப்பதற்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.இந்த தொழில்நுட்ப ஒப்பளிப்புக்காக மாவட்ட அளவிலான தொழில்நுட்ப அலுவலர்கள் மாவட்டத்திற்கு வெளியில் உள்ள உயர் அலுவலர்களை கலந்தாலோசிக்க வேண்டியதில்லை.

(viii) கணக்கு மற்றும் தணிக்கை.

தற்போது நடைமுறையிலுள்ள மற்றும் அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணை மற்றும் விதிமுறைகளின்படி கணக்கு பராமரித்தல், தணிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் கணக்கு மேற்பார்வை செய்தல் ஆகியவை இத்திட்டத்திற்கு பின்பற்றப்படவேண்டும்.

5) சட்டமன்ற உறுப்பினர் பணிகளை பரிந்துரைத்தல் : இத்திட்டத்தின் கீழ், சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பணிகளை தேர்வு செய்து, எழுத்து மூலமாக சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளுக்கு சென்னை மாநகராட்சி ஆணையரிடமும், மற்ற அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் தெரிவிக்க வேண்டும்.

6) நகர்ப்புற/ ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளில் அடிப்படை வசதிகளான அதாவது சாலை, குடிநீர் வழங்கல் முதலிய பணிகளை சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்தலாம்.

நிபந்தனை (i) அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளில் வசிக்கும் மக்கள் அம்மனைக்கட்டுகளில் உள்ள சாலைளை அன்பளிப்புப் பத்திரம் (Gift Deed) மூலம் அப்பகுதியைச் சார்ந்த உள்ளாட்சி அமைப்புகளிடம் பதிவு செய்து ஒப்படைக்க வேண்டும்

நிபந்தனை (ii) விதிமுறைகளின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய மேம்பாட்டுக் கட்டணத்தில் 50 விழுக்காடு அங்கீகரிக்கப்படாத மனைக் கட்டுகளில் வசிக்கும் மக்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலுத்த வேண்டும்.

7) ஒருமுறை நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட பணிகளை மாற்றம் செய்யக் கூடாது. சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்த பணிகளுக்கான இடங்களை, நிர்வாக அனுமதி வழங்கும் முன்பு சம்பந்தப்பட்ட அலுவலர் கண்டிப்பாக தேர்வு செய்த இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு, பணிகளை மேற்கொள்வதற்கான உரிய இடவசதி மற்றும் பிரச்சினை ஏதும் இல்லாத இடமாக இருப்பதை சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து சான்றிதழ் பெற்று உறுதி செய்ய வேண்டும்.

8) சட்டன்ற உறுப்பினர் பணியிடம் காலியாகும் பொழுது பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் சேமிப்பு நிதியைப் பயன்படுத்துதல்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பணியிடத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி எக்காரணத்திற்காகவாவது காலி செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட தொகுதிகளில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

I. முந்தைய சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்ட பணிகள் செயலாக்கத்தில் இருக்குமானால், மேற்படி பணிகள் முழுமையாக முடிக்கப்பட வேண்டும்.

II. முந்தைய சட்டமன்ற உறுப்பினர்களால் பணிகள் தேர்வு செய்யப்பட்டு அறிவுரை பெறப்பட்டும் நிர்வாக காரணங்களினால் 45 நாட்களுக்கு மேல் நிருவாக அனுமதி வழங்கப்படாத இனங்களில் அத்தகைய பணிகள் விதிகளுக்குட்பட்டதாக இருப்பின் முழுமையாக செய்து முடிக்கப்பட வேண்டும்.

III. முந்தைய சட்டமன்ற உறுப்பினர்களால் பணிகள் தேர்வு செய்யப்பட்டு மேலே வரிசை எண்.II–ல் குறிப்பிட்டுள்ள காரணம் தவிர வேறு காரணங்களினால் பணிகள் தேர்வு செய்து செயல்படுத்தாமல் இருப்பின் அத்தகைய பணிகளை தற்போதைய (புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட) சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுடன் எடுத்துச் செய்யலாம்.

IV. முந்தைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில், செலவழிக்கப்படாத சேமிப்புத் தொகைகள் இருப்பின் தற்போதுள்ள (புதியதாக தேர்ந்து எடுக்கப்பட்ட) சட்டமன்ற உறுப்பினர்கள் மேற்படி தொகைகளுக்கான பணிகளை தேர்வு செய்து பரிந்துரைக்கலாம்

9. முன்னுரிமைப் பணிகள் : 2002–2003ம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.82 இலட்சத்தில், ரூ.50 இலட்சத்தை கீழ்வரும் 4 முன்னுரிமைப் பணிகளுக்காக ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ஒதுக்க வேண்டும்.

(1) பெண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டுவதற்காக ரூ.20.00 இலட்சம் (ரூ.2 இலட்சம் 10 கழிவறை வளாகங்கள்) ஒதுக்கீடு வேண்டும்.

(2) பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவ, மாணவியர் விடுதி கட்டுவதற்காக ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(3) ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கான மாணவ, மாணவியர் விடுதி கட்டுவதற்காக ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(4) கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டிடம், ஊராட்சி அலுவலகத்துடன் இணைத்து கட்டுவதற்கு ரூ.6.00 இலட்சம்(ரூ.0.60 இலட்சம் X10 கட்டிடங்கள்.) ஒதுக்கீடு செய்ய வேண்டும் இப்பணிக்கு இணைப்பில் இனம் 1ல் குறிப்பிட்டுள்ள தடையிலிருந்து சிறப்பினமாக விலக்கு அளிக்கப்படுகிறது.

10. (i) ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் (பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி) முன்னுரிமைப் பணிகளான நான்கு பணிகளில் ஒரு பணியோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளையோ எடுத்துச் செய்ய வாய்ப்பே இல்லாத பட்சத்தில், அத்தகைய முன்னுரிமைப் பணிகளுக்கு பதிலாக கீழ்காணும் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்றபாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கலாம்.

அ) பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

ஆ) புதிய சத்துணவுக் கூடம் / புதிய சமையற்கூடம் கட்டுதல் மற்றும் பழைய சத்துணவுக் கூடங்கள் / பழைய சமையற்கூடங்கள் பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.

இ) சிறுபாலம் கட்டுதல்.(Culvert)

ஈ) 20 அடி X 20 அடி அளவு கொண்ட கலையரங்கம் கட்டுதல்.

உ) சமுதாயக் கூடம் கட்டுதல்

(அ) முதல் (உ) முடிய உள்ள இனங்கள் ஊரக மற்றும் நகர பகுதிகள் இரண்டுக்கும் பொருந்தும்.

ii) குடிநீர்ப் பணிகளைப் பொருத்த வரையில் நகரப் பகுதிகளில் சிறு மின்விசை இறைப்பான் (Mini Power Pump) மட்டும் அமைத்தல் வேண்டும்..

iii) சட்டமன்ற உறுப்பினர் அலுவலக உபயோகத்திற்கு ஒரு கணிணியும், ஒரு பிரிண்டரும் அரசு நிறுவனமான எல்காட் நிறுவனத்திடமிருந்து வாங்கிக் கொள்ளலாம். இச்செலவினத்திற்கு இணைப்பில் இனம் 6—ல் குறிப்பி ட்டுள்ள “ இருப்புச் செய்யத்தக்க எந்தவிதமாக பொருட்களையும் வாங்குதல் கூடாது“ என்ற தடையிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. ஒரு அலுவலகத்திற்கு ஒரு கணிணியும், ஒரு பிரிண்டரும் ஒரு முறை மட்டும் வாங்கிக் கொள்ளலாம்.

11) பத்தி9—ல் குறிப்பிட்டுள்ள 4 முன்னுரிமைப் பணிகளில் தேவையின்மை மற்றும் இடவசதியின்மை போன்றவைகள் சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / சென்னை மாநகர ஆணையர் முழு திருப்தி பெற்று முடிவு செய்த பின்னரே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முன்னுரிமைப் பணிகள் பரிந்துரை செய்வதில் தளர்வு அளிக்கப்பட வேண்டும். பத்தி—9ல் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமைப் பணிகளுக்கு ஒதுக்கியது போக மீதமுள்ள தொகையை இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு செய்யக்கூடாத பணிகள் தவிர,இதரப் பணிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தங்கள் விருப்பப்படி பரிந்துரைக்கலாம்.

12) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யக்கூடாத பணிகள் பட்டியல் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

13) இந்த வழிகாட்டி நெறிமுறைகள் 2001—2002ஆம் ஆண்டிற்கான பணிகளுக்கும் பொருந்தும்.

14) இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.1989/எப்.எஸ்./பி/ 2002 நாள்.10.06.2002 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எல்.என். விஜயராகவன்**
அரசு செயலாளர்

## இணைப்பு

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யக்கூடாத பணிகள் விபரம்.

1. மத்திய, மாநில அரசுகளின் அலுவலகங்களுக்கும், அரசுத் துறைகள், முகமைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலகங்களுக்கும் பணியாளர் குடியிருப்புகளுக்கும் கட்டிடம் கட்டுதல்.
2. வணிக நிறுவனங்கள், அறநிறுவனங்கள், பதிவு பெற்ற சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவை தொடர்பான வேலைகள் செய்தல்.
3. நீண்டகாலம் பயன்படும் சொத்துக்களை புதுப்பித்தல், தர மேம்பாடு செய்தல் முதலியவைகளுக்கான சிறப்பு பழுது பார்த்தல் பணிநீங்கலாக மற்ற பொது பழுது பார்ப்புப் பணிகளையும் நிர்வாக பணிகளையும் மேற்கொள்ளல்.
4. மானியங்களும், கடன்களும் வழங்குதல்.
5. நினைவுச் சின்னங்களும், நினைவு மண்டபங்களும் கட்டுதல்.
6. இருப்பு செய்யத்தக்க எந்தவிதமான பொருள்களையும் வாங்குதல்.
7. நில எடுப்புக்கும், நில எடுப்புக்கு இழப்பீடு வழங்குவதற்கும் செலவிடல்.
8. அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களின் ஒரு பகுதியாக அமைவது நீங்கலாக தனிப்பட்ட ஒருவருக்கு ஆதாயம் அளிக்கக் கூடிய சொத்துக்களுக்குச் செலவிடல்.
9. மத வழிபாட்டு இடங்களுக்குச் செலவிடல்.
10. பேருந்து நிழற்குடை.
11. கான்கிரீட் சாக்கடைகள் (Road side concrete drains)